கன்றுகள் போட்டு இருக்கிறார்கள் என்று தெரியவருகிறது. இப்படிச் செய்த காரணத்தினாலேதான் அந்தத் திட்டம் இயங்காது இருக்கிறது. எனவே, இது குறித்து மறுபடியும் இந்த அரசு முயற்சி எடுத்து ஆவன செய்யுமா என்று அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்துக்களை எல்லாம் மனதில் எடுத்துக்கொண்டு, இது பற்றிப் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 330, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

330—

அசோகபுரம் பஞ்சாயத்தை நகரப் பஞ்சாயத்தாக மாற்றல்

*11137 **திரு. கே. செல்வராஜ்:**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் அசோகபுரம் பஞ்சாயத்தை நகரப் பஞ்சாயத்து ஆக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவை மாவட்டம், பெரிய நாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அசோகபுரம் ஊராட்சியைப் பேரூராட்சியாக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை. உள்ளாட்சி அமைப்புகளில் எவ்வித நிர்வாக மாற்றமும் செய்தல் கூடாது என்ற இந்த அரசின் தடையாணை 18-3-1993 அன்று விடுவிக்கப்பட்டுள்ளது.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அசோகபுரம் கிராமப் பஞ்சாயத்தானது, அந்த இடத்தில் சுமார் 4 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள்- அரசு ஊழியர்கள் இருக்கும் என்.ஜி.ஓ. காலனி என்று அழைக்கின்ற அந்தப் பெரிய நகரம் கிராமப் பஞ்சாயத்தாக உள்ளதால், சில முன்னேற்றப் பணிகள் முறையாக செயல்படுத்த முடியாமல் தடைப்பட்டு இருக்கின்றது. இதை அரசு பரிசீலனை செய்து, அந்த கிராமப் பஞ்சாயத்தை நகரப் பஞ்சாயத்தாக அறிவிக்க அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி பரிசீலித்து முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய ஒப்பற்ற தலைவி டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில் எனது பகுதியில் உள்ள காளப்பட்டி பேரூராட்சி, அதே போன்று . . . (மணி அடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த ஊரைப்பற்றிய கேள்வி இருந்தால் கேட்கலாம். (குறுக்கீடு) காளப்பட்டி என்கிறீர்களே? (குறுக்கீடு) இந்தக் கேள்வி பற்றிதானா? சரி.

திரு. சிங்கை கோவிந்தராசு: காளப்பட்டி பஞ்சாயத்து, வள்ளலூர் பஞ்சாயத்து ஆகியவற்றை மாநகராட்சியோடு இணைக்க அமைச்சர் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இரண்டுவிதக் கருத்துக்களைக் கூறுகின்ற காரணத்தினாலே, அந்தப் பகுதி மக்களுடைய கருத்துக்களை அறிந்து இதுபற்றி முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கப்படும் என்று கூறியதற்கு அந்த கிராமப் பஞ்சாயத்தினுடைய மக்கள் சார்பாக நன்றியைக் கூறி, நீங்கள் நிச்சயம் இந்த ஆண்டே அந்தக் கிராமப் பஞ்சாயத்தை நகரப் பஞ்சாயத்தாக மாற்ற வேண்டும் என்றும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய தொகுதியில் அந்தக் கிராமப் பஞ்சாயத்து இருக்கின்ற காரணத்தினால் அந்த அமைச்சரும் இதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டு, அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியைச் சார்ந்த இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் மாறுபட்ட கருத்துக்களைக் கூறுகிற காரணத்தினாலே, அந்தப் பகுதி மக்களுடைய கருத்தை அறிந்து, இதுபற்றி இறுதியான முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கல்வி அமைச்சரின் கருத்தையும் கேட்டு நீங்கள் முடிவு எடுங்கள்: